Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 10, 2022

செவ்வாய்க்கிழமை மே 10, 2022 | ஒளி: 07 கதிர்: 301 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## முழு ஊரடங்கு: 108 பேர் காயம்

கொழும்பு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களை அடுத்து, மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரையிலும் நாடளாவிய ரீதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் கொழும்பில் சில பிரிவுகளுக்கு அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு, பின்னர் மேல் மாகாணத்துக்கு பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் முழு நாட்டுக்கும் பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## பொலிஸாரின் கண்முன்னே இரு ‘கம’வையும்

# குண்டர்கள் பந்தாடினர்

- கூடாரங்களை அடித்து நொறுக்கி, கொளுத்தி அட்டகாசம்
- பேயாட்டம் ஆடியோர் மீது திருப்பித் தாக்குதல்
- பதிலடியால் மொட்டுகட்சியினர் திக்குமுக்காடினர்
- பேரவாவியில் குதித்து, தத்தளித்து நீந்தி தப்பினர்
- நீர்பீச்சியடிக்கும் வாகனங்கள் திசைமாறி அடித்தன
- பஸ்கள் புரட்டிவிடப்பட்டன; கொளுத்தப்பட்டன
- பணயக் கைதிகளாக சிக்கியோர் முழந்தாளிட்டனர்
- மதுப் போத்தல்களுடன் நொறுக்குத் தீனிகளும் சிக்கின
- கண்ணீர் புகைக்குண்டுகள் புகை கக்க மறுத்தன
- ஆயிரமாயிரம் பேர் திரண்டுவந்து ஆதரவளித்தனர்


‘மைனா கோ கம’ மீது தாக்குதல்


‘கோட்டா கோ கம’ மீது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அட்டகாசம்


‘கோட்டா கோ கம’வை புனரமைப்பதற்காக ஒன்று திரண்ட ஆதரவாளர்கள்

தொடர்ச்சி P3

வன்முறைகளைக் கட்டுப்படுத்த

## இராணுவம் பாதுகாப்பு கடமைகளில்



நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக பொலிஸாருடன் இணைந்து, இராணுவமும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

காலி முகத்திடலில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து, குறித்த பகுதியில் பொலிஸாருடன் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் நாட்டின் தற்போதைய அமைதியின்மை நிலைமை காரணமாக பொலிஸாருடன் இராணுவத்தையும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டதாக அறிவிப்புகள் வந்திருந்த நிலையில் அது குறித்து இராணுவத் தளபதி கூறியதாவது;

தொடர்ச்சி P2



## அமெரிக்கா, பிரித்தானியா வன்மையாக கண்டிக்கிறது

அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அமெரிக்க தூதுவரும், பிரித்தானிய உயர்ஸ்தானிகரும் தெரிவித்துள்ளனர். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்

தொடர்ச்சி P2

## பிரச்சினைகளை வன்முறை தீர்க்காது

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

பா.நிரோஸ்



அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு முன்பாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தங்களது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## வன்முறை மோதல்களால் பதவியைத் துறந்தார் மஹிந்த

### புதிய அமைச்சரவை தொடர்பில் ஆராய்வு



பிரதமர் பதவியை துறக்குமாறு ஜனாதிபதி கோரவில்லை. அவ்வாறு கோரவும் மாட்டார். எனக்கு மக்கள் ஆணை இருக்கிறது என்றெல்லாம் தெரிவித்து வந்த பிரதமர் ராஜபக்ஷ, நேற்று (09) மாலை பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

தொடர்ச்சி P2

## இதற்காகத்தான் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தினரா?



பொதுமக்களின் அமைதியான போராட்டத்தை அடாவடிக்காரர்கள் முலமாகத் தாக்குவதற்குத்தான் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தினாரா என முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான ஜனநாயக ரீதியில் போராடிக்கொண்டுள்ள பொதுமக்கள் மீது நேற்று (09) கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில்

தொடர்ச்சி P2

## மஹிந்த ராஜபக்ஷ கைது செய்யப்பட வேண்டும்



அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது, போராட்டக்காரர்களை தாக்குவதற்கு பிரதமரே அடாவடிக்காரர்களை தூண்டிவிட்டதாகவும், கொழும்பில் இவ்வாறு இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுக்கு உடந்தையாக இருந்து முழுக்க காரணமாக செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்ட வேண்டும். இவற்றை வேடிக்கை பார்த்த ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் மற்றும்

தொடர்ச்சி P2

## குண்டர்களால் தாக்கப்பட்டார் சஜித்



**கம்புகள் தடிகளுடன் வந்தவர்கள் பாதுகாப்பு படைகளையும் தாண்டி, எதிர்க்கட்சி தலைவரின் வாகனத்தை சேதப்படுத்தியதுடன் எதிர்க்கட்சி தலைவர் மீதும் தாக்குதலை நடத்தமுற்பட்டனர்**

பா.நிரோஸ்

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் நடத்தப்பட்ட வன்முறை சம்பவங்களை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைத்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் மீதும் மஹிந்த ஆதரவாளர்கள் தாக்குதலை மேற்கொண்டு, அவரது வாகனத்தையும் சேதப்படுத்தினர்.

அரசாங்கத்துக்கு எதிராக அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ‘கோட்டா கோ கம’, ‘மைனா கோ கம’ போராட்டங்களின் மீது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த மஹிந்த ஆதரவாளர்களால் நேற்று (09) மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித் தாக்குதலைத் தொடர்ந்து, காலிமுகத்திடலுக்கு பல அரசியல் தலைவர்கள் வருகைத்தந்திருந்தனர்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்தின் மெத்தனப்போக்கு கடும் விளைவுகளை ஏற்படுத்தும்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

அமைதியான முறையில் அரச எதிர்ப்பு செயற்பாடுகளில் ஈடுபட்ட பொதுமக்களை அடாவடிக்காரர்கள் மூலமாக தாக்கியமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை தாக்குவதை தடுக்க அரசாங்கமும் காவல்துறையும் மெத்தனப் போக்கை கடைபிடித்தால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நிட்டம்புவை களேபரம்

## ஆளுங்கட்சி எம்.பியும் இளைஞனும் பலி





அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் திரண்டமையால் நிட்டம்புவையில் இடம்பெற்ற அமைதி இன்மையை அடுத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்து வத்துபிட்டிவல தள வைத்தியசாலையில் நேற்று (09) அனுமதிக்கப்பட்டிருந்த 27 வயதான இளைஞனொருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் படுகாயமடைந்ததுடன், இடம்பெற்ற களேபரத்தில் மேலும் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து, பொலன்னறுவை மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இராணுவம் பாதுகாப்பு கடமைகளில்



அலரிமாளிகளுக்கு முன்பாகவும் காலிமுகத்திடலிலும் போராட்டக்காரர்களுக்கு இடையில் ஏற்பட்ட அமைதியின்மை வன்முறையாக மாறியுள்ளது. இது நாட்டில் பல்வேறு பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே உடனடியாக நாட்டின் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக பொலிஸாருடன் இணைந்து இராணுவமும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளோம். எவரும் சுதந்திரமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் உரிமை உண்டு, ஆனால் அதுவே பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்துவிடக்கூடாது. எனவே

மக்களின் பாதுகாப்பிற்காகவே இராணுவத்தினர்பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆகவே இராணுவத்தின் கடமைகளை மக்கள் குழப்பாது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## அமெரிக்கா, பிரித்தானியா வன்மையாக....

மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், இந்த வன்முறையை தூண்டும் நபர்களை கைது செய்யவும், வழக்கு தொடர்வது உற்பட முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும், இந்த சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கு அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன், நாடு அமைதியாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அதேபோல் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறையை வன்மையாக கண்டிக்கிறோம். அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், வன்முறையில் ஈடுபடுபவர்களை கண்டறியும் பொறுப்பும் அதிகாரிகளுக்கு உண்டு எனவும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன்தெரிவித்துள்ளார்.

## பிரச்சினைகளை வன்முறை தீர்க்காது

அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல், தூண்டிவிட்டு பங்கேற்பவர்களால் நடைபெறும் வன்முறைச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் என தெரிவித்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ, தற்போதைய பிரச்சினைகளை வன்முறை தீர்க்காது எனவும் தெரிவித்துள்ளார். இதனால், நாட்டு மக்கள் அனைவரும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள அவர், இந்த நெருக்கடியை தீர்க்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள தற்போதைய நிலையில் பொதுமக்கள் அமைதியை கடைப்பிடிக்க வேண்டும் என மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார். வன்முறையானது வன்முறையையே உருவாக்கும் என தெரிவித்திருந்த அவர், மக்களை நிதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தி டுவிட் செய்திருந்தார். வன்முறையை தூண்டும் வகையில் செயற்படவேண்டாம். ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்க தற்போதைய அரசாங்கம் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

# முழு ஊரடங்கு: 108 பேர் காயம்

இந்நிலையில், கொழும்பில் அரசாங்கத்துக்கு ஆதரவானவர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு மற்றும் மோதல்கள் காரணமாக 108 பேர் காயமடைந்து இதுவரையிலும் வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படக்கூடுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வன்முறை மோதல்களால் பதவியைத் துறந்தார் மஹிந்த

அதனையடுத்து இன்னும் சில அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் பதவியை இராஜினாமா செய்தனர்.

பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து முழு அமைச்சரவை கலைந்துவிடும். புதிய அமைச்சரவையே நியமிக்கப்படவேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை அலரிமாளிகையில் சந்தித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, “மக்களுக்காக நானிருப்பேன்” பிரதமருக்கு ஆதரவாக அலரிமாளிக்கைக்குள் ஆதரவு கோஷங்கள் எழுப்பப்பட்டன, வெளியே ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள், “மைனா ஹோ கம”வின் மீது தாக்குதல்களை நடத்தினர். அதன்பின்னர் வன்முறையாக வெடித்து, பல இடங்களுக்கும் வியாபித்தது.

இவ்வாறு வன்முறை சம்பவங்கள் வியாப்பித்து சென்றதை அடுத்தே, மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியை இராஜினாமா செய்து, இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்தார். அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். அத்துடன் புதிய அமைச்சரவை நியமிப்பதற்கு தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருகின்றார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரசாங்கத்தின் மெத்தனப்போக்கு கடும் விளைவுகளை ஏற்படுத்தும்

அரசாங்கத்திற்கு எதிராக அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தி வரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நேற்று (9)நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

பொல்லுகள் மற்றும் தடிகளுடன் ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று அலரிமாளிகைக்கு முன்பு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை தாக்கியதுடன், காலி முகத்திடலில் ஜனநாயக ரீதியில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி கூடாரங்களை நாசமாக்கி தீ வைத்துள்ளனர். இது வன்மையாக கண்டிக்கத்தக்க செயலாகும். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதனை வன்மையாக கண்டிப்பதுடன் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொலிஸார் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்தோம். ஜனநாயகத்தின் குரல் ஒடுக்கப்படுவது ஆரோக்கியமான விடயம் அல்ல, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை தாக்குவதை தடுக்க நடவடிக்கை எடுக்காத இந்தச் சூழலைச் சமாளிக்க அரசாங்கமும், காவல்துறையும் மெத்தனப் போக்கை கடைபிடித்தால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். அதேபோல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தவும். அரசாங்கம் மற்றும் பொலிஸாரின் செயலற்ற தன்மையின் வெளிப்பாடே இது எனவும், இவ்வாறான நிலைமைகள் சர்வதேச மட்டத்தில் அழுத்தங்களை உருவாக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும், எனவே பொது மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இதற்காகத்தான் அவசரகால...

நடந்துவந்து நிராயுதபாணியான பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதன்போது பொலிஸார் என்ன செய்துகொண்டிருந்தனர். இதற்காகத்தான் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தினாரா என கேள்வி எழுப்பியுள்ளார்.

# மஹிந்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்ட வேண்டும்

பிரதமர் ஆகியோர் உடனடியாக பதவி விளக்க வேண்டும் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த “மைனா கோ கம “ மற்றும் காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த “கோட்டா கோ கம” ஆகியவற்றின் மீது மஹிந்த ஆதரவு அணியினரால் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் தமது கண்டனங்களை வெளிப்படுத்தும் போதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது போராட்டக்காரர்களை தாக்குவதற்கு பிரதமரே அடாவடிக்காரர்களை தூண்டிவிட்டதாகவும், இவ்வாறான தாக்குதலை தடுக்காது வேண்டுமென்றே முட்டுக்கட்டையாக ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் செயற்பட்டதாகவும், ஆகவே ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும், கொழும்பில் இவ்வாறு இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுக்கு முழுக்க காரணமாக செயற்பட்ட மஹிந்த ராஜபக் ஷ உடந்தையாக கைதுசெய்யப்பட்ட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், ‘கோட்ட கோ கம’ போராட்டக்களத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட தாக்குதலை பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவே தூண்டிவிட்டார் எனவும், பிரதமர் மூலமாக முன்னெடுக்கப்பட்ட இந்த அசம்பாவித சம்பவத்திற்கு ஜனாதிபதியும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

# குண்டர்களால் தாக்கப்பட்டார் சஜித்

வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று சில நிமிடங்களுக்குள்ளேயே எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸவும் காலி முகத்திடலுக்கு குழுவாக வந்திருந்தார். தனது வாகனத்திலிருந்து இறங்கி காலி முகத்திடல் நோக்கி எதிர்க்கட்சி தலைவர் சஜித்தும் எரான் விக்ரமரத்ன எம்.பியம் நடந்து செல்லும்போது எதிரே வந்த சிலர் தீடீரென அவர்களை தாக்கத் தொடங்கினார். கம்புகள் தடிகளுடனும் வந்தவர்கள் பாதுகாப்பு படைகளையும் தாண்டி எதிர்க்கட்சி தலைவரின் வாகனத்தையும் சேதப்படுத்தியதுடன் எதிர்க்கட்சி தலைவர் மீதும் தாக்குதலை நடத்த முற்பட்டனர். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவரின் பாதுகாப்புக்காக வந்திருந்த விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் விரைந்து செயற்பட்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் உள்ளிட்டக் குழுவினரை வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றியிருந்தனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் தனக்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என எதிர்க்கட்சிதலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருந்ததோடு, எவ்வாறாயினும் தனது சட்டைப் பையில்கண்ணாடித்துகல்கள் காணப்பட்டதாகவும், தனது உத்தியோகப்பூர்வ வாகனம் மீது தாக்குதல்மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். ராஜபக் ஷக்களின் மிலேச்சுத்தனமான இதுபோன்ற தாக்குதல்களால் தான் பின்வாங்கப்போவதில்லை எனக்கும், தனது தந்தைக்கு இவை புதிதல்ல என்பதால் நாளையே மீண்டும் வீதிக்கு இறங்குவேன் எனவும் சஜித் தெரிவித்திருந்தார். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்திருந்தார் எந்தையும் குறிப்பிடத்தக்கது.

# ஆளுங்கட்சி எம்.பியும் இளைஞனும் பலி

அமரகீர்த்தி அத்துகோரளை மரணமடைந்துள்ளார். அத்துகோரள எம்.பிக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் வாகனம் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து மக்களால் தாக்கப்பட்ட போது, தாக்கியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்பகுதிக்கு அருகிலுள்ள சிசிடிவி காட்சிகளில், எம்.பி பாதுகாப்புக்காக ஒடுவது பதிவாகியுள்ளது. பின்னர், ஒரு கட்டடத்துக்குள் மறைந்துகொண்ட அவர், தனது கைத்துப்பாக்கியால் உயிரை மாய்த்துக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பலியான இளைஞன், எம்.பியின் மெய்பாதுகாவலர் என அறியமுடிகின்றது. எனினும், அந்தத் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.



களத்தில்...

அலரிமாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த “மைனா கோ கம”, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த “கோட்டா கோ கம” ஆகியவற்றின் மீது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் நேற்று (09) தாக்குதல்களை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஸ்தலத்துக்கு விரைந்தார். அத்துடன் புத்தளத்தில் ஆளும் கட்சியின் எம்.பியான சனத் நிஷாந்த மற்றும் அவருடைய சகோதரின் வீடுகள் மற்றும் சொத்துகள் பொதுமக்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதை படங்களில் காணலாம்.

PAGE 1 தொடர்ச்சிகள்




## பொலிஸாரின் கண்முன்னே இரு 'கம'வையும்

# குண்டர்கள் பந்தாடினர்

பா.நிரோஷ்

ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தை வீட்டுக்கு செல்லுமாறு கோரி, நாடளாவிய ரீதியிலான போராட்டங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக, மிகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து நடத்திய போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் வன்முறைகளை கையாண்டமையால் முழு நாட்டுக்கும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது தீர்மானத்தை நேற்று (09) காலை அறிவிப்பார் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அலரிமாளிகைக்குச் சென்றிருந்த ஆதரவாளர்கள், பதவி விலகக்கூடாதென வலியுறுத்தினர். அதேபோல, அலரிமாளிகைக்கு வெளியிலும் மஹிந்தவுக்கு ஆதரவாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவ்வாறு ஈடுபட்டிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள், குண்டாந்தடி, இரும்பு கம்பிகளைக் கொண்டு, 'மைனா ஹோ கம'வை துவம்சம் செய்து, கூடாரங்களை உடைத்து, நொறுக்கி தீயிட்டு கொளுத்தினர். அதன்பின்னர் 'கோட்டா ஹோ கம' வுக்குச் சென்று ரகளையில் ஈடுபட்டனர்.

நிராயுத பாணிகளாக இருந்த போராட்டக்காரர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். இதனால், இருதரப்பினருக்கும் இடையில் வன்முறை வெடித்தது. மதுபோதையில் தங்களைத் தாக்க வந்தவர்கள் மீது, போராட்டக்காரர்கள் பதில் தாக்குதல்களை நடத்தினர். இன்னும் சிலரை சிறைப்பிடித்தனர்.

அவ்வாறு சிக்கிக்கொண்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தங்களுக்கு மதுபானம் கொடுத்தவர்கள், சாப்பாடு கொடுத்தவர்கள், அடிக்குமாறு அறிவுறுத்தியவர்கள் யாரென கூறிவிட்டனர்.

### 'மைனா கோ கம' மீது தாக்குதல்

மஹிந்த ஆதரவாளர்களின் செயற்பாடுகளால் நேற்று (09) காலை முதலே அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. அலரி மாளிகைக்குள் வைத்தே, காலிமுகத்திடலுக்கு சென்று அங்குள்ள போராட்டக்காரர்களை விரட்டியடிப்போமென மஹிந்த ஆதரவாளர்கள் கூச்சலிட்டவாறே இருந்தனர். இதனைத் தொடர்ந்து, தனது ஆதரவாளர்களுடன் மஹிந்த ராஜபக்ஷ உரையாடிய பின்னர், அங்கிருந்தவர்கள் 'மைனா கோ கம' வை முதலில் தாக்கினார்கள்.

இரும்புக் கம்பிகள், குண்டாந்தடிகள் பலகைகள் உள்ளிட்டவற்றை கொண்டு



'மைனா கோ கம'வையும் அங்கு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் தாக்கியதோடு, போராட்டக்காரர்களின் கூடாரமும் சுக்குநூறாக நொருக்கப்பட்டு, தீயிட்டு கொளுத்தப்பட்டது. இதன்போது அங்கிருந்த பொலிஸார், வன்முறை சம்பவங்களைத் தடுக்க தவறியதாக அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தார்கள்.

### 'கோட்டா ஹோ கம' தீயிட்டு கொளுத்தப்பட்டது

'மைனா கோ கம'வைத் தாக்கி அங்கிருந்த ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை நடத்தி முடித்துவிட்டு, அலரி மாளிகையிலிருந்து சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரமுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் 'கோட்டா கோ கம'வை தாக்குவதற்காக சென்றனர்.

இதன்போது காலி வீதியில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸாரின் வீதித் தடைகள் மீது ஏறி, காலிமுகத்திடல் நோக்கி, மஹிந்த ஆதரவாளர்கள் புறப்பட்ட நிலையில், பொலிஸார் அவர்களை தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

### தடுக்கத் தவறிய பொலிஸார்

'மைனா கோ கம'வைத் தாக்குவதற்கு முன்பாகவே, இவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெறலாம்; அதைப் பொலிஸார் தடுக்க வேண்டுமெனத் தெரிவித்த இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம், முன்கூட்டியே பொலிஸ்மா அதிபருக்கு மின்னஞ்சல் ஊடாக எச்சரித்திருந்தது.

மேலும், பொலிஸ்மா அதிபர், பொலிஸ் ஊடகப்பேச்சாளருக்கு தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்கூட்டி எச்சரிப்பதற்காக,



இளம் ஊடகவியலாளர் சங்கம் நேற்றுக் காலை முதலே, பல தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டிருந்த நிலையிலும் பொலிஸார் அதற்கு உரிய பதிலை வழங்கவில்லை.

### உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன

'கோட்டா கோ கம' மீது தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுமென முன்கூட்டியே கணிக்கப்பட்டதால், அங்கிருந்த பலரும் மஹிந்த ஆதரவாளர்கள் அங்கு வருவதற்கு முன்னரே, வெளியேறி இருந்தார்கள். இதனால் பெரும் உயிர் சேதம் தடுக்கப்பட்டிருந்தது. எனினும், அங்கிருந்த சிலர் மீது மஹிந்த ஆதரவாளர்கள் கொலைவெறி தாக்குதலில் ஈடுபட்டதோடு, 'கோட்டா கோ கம' அடித்து நொறுக்கப்பட்டு தீயிட்டு, கொளுத்தி தரைமட்டமாக்கப்பட்டது.

ஆரம்பத்திலேயே மஹிந்த ஆதரவாளர்களை வன்முறைகளில் ஈடுபடாதவாறு பொலிஸார் தடுத்திருக்கலாம். எனினும் 'கோட்டா கோ கம' முற்றாக, மஹிந்த ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு, தீயிட்டு கொளுத்தப்பட்ட பின்னரே, பொலிஸார் கண்ணீர்புகைப் பிரயோகம் மேற்கொண்டதோடு நீர்த்தாரைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

### முகஞ்சுழிக்க வைக்கும் செயல்

மஹிந்த ஆதரவாளர்கள் மீது கண்ணீர்புகைப் பிரயோகத்தைத் தடுக்கும் வகையில், அங்கிருந்த பௌத்த பிக்கு ஒருவர் கண்ணீர் புகைப்பிரயோக வண்டியின் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து, பொலிஸார் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அவரை அப்புறப்படுத்தினர்.

### வன்முறையை தடுத்த சட்டத்தரணிகள்

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட 'மைனா கோ கம', 'கோட்டா கோ கம' ஆகிய பகுதிகளில், மஹிந்த ஆதரவாளர்கள் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஊழியர்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேபோல, கொழும்பு உயர்நீதிமன்ற



சட்டத்தரணிகளும் நீதிமன்றத்துக்கு முன்பாக வந்து, போராட்டத்தில் ஈடுபட்டதோடு, சட்டத்தரணிகள் பலரும் போராட்டக்களத்துக்கு வந்து, அங்கிருந்தவர்கள் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதைத் தடுத்தனர்.

### சட்டமா அதிபரிடம் சென்ற சட்டத்தரணிகள்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள வன்முறை சம்பவங்களை, உடனடியாகத் தடுத்த நிறுத்த வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

### பயங்கரமான பதிலடி

'கோட்டா கோ கம', 'மைனா கோ கம' மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டுவிட்டு, பஸ்களில் திரும்பிச் சென்று கொண்டிருந்த மஹிந்த ஆதரவாளர்களுக்கு, பொதுமக்கள் பயங்கரமான பதிலடியை வழங்கினர்.

மஹிந்த ஆதரவாளர்கள் பயணித்த பஸ்கள், அடித்து நொறுக்கப்பட்டதோடு, ஆதரவாளர்களை கட்டிவைத்தும், குளங்களில் தூக்கியெறிந்தும், குப்பை தொட்டிகளில் வீசியெறிந்த சம்பவங்களும் பதிவாகியிருந்தன. குறிப்பாக, மஹிந்த ஆதரவாளர்கள் சிலர், பொதுமக்களால் தாக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகின.

இதேவேளை, போராட்டக்காரர்களை தாக்கிய மஹிந்த ஆதரவாளர்கள் மீது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைத்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக, மஹிந்த ஆதரவாளர்கள் பயணித்த பஸ் வண்டிகள், பெக்கோ இயந்திரம் கொண்டு தாக்கப்பட்டும், சில பஸ்கள் பொதுமக்களால் தாக்கப்பட்டு குளங்களிலும் தள்ளப்பட்டன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பாதுகாப்பு வாகனம் என சந்தேகிக்கப்படும் கப் ரக வண்டியும் தாக்கப்பட்டு குளத்தில் வீசியெறியப்பட்டது.

### மீண்டும் எழுந்தது 'கோட்டா கோ கம'

'கோட்டா கோ கம' வில் அரசாங்கத்துக்கு எதிரானவர்களால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டிருந்த நூலகம், தற்காலிக சிகிச்சை நிலையங்கள் என்பன குண்டர்களால் தாக்கியழிக்கப்பட்டு, தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இதேவேளை, 'கோட்டா கோ கம' தாக்கப்பட்டு சில நிமிடங்களுக்குள்ளாகவே, 'கோட்டா கோ கம'வுக்கு ஆதரவு வழங்குவதற்காக ஆயிரக்கணக்கானோர் அங்கு கூடினர். இதனால் மீண்டும் அங்கு பதற்றம் ஏற்பட்டதோடு, இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். எவ்வாறாயினும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டக்காரர்கள், மீண்டும் முன்பைவிட பல மடங்கு பலமிக்கதாக ஒன்றுதிரண்டிருந்தனர்.

### பிந்திய செய்திகள்:

பேரவாவியில் குதித்து, தத்தளித்து, நீந்தி பலரும் தப்பியதுடன், மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து, ஆட்களை ஏற்றிவந்த பஸ்கள் சில புரட்டிவிடப்பட்டு, தீயிட்டு கொளுத்தப்பட்டன. முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்களின் வீடுகளும் சொத்துகளும், பொதுஜன பெரமுனவின் கட்சி காரியாலயங்களும் 'அவன்காட்' நிறுவனத்துக்குச் சொந்தமான ஹோட்டலும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.








உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX

கல்முனையில் தமிழர்களின்

# காணி உரிமை கபளீகரம்

## மாநகர சபை உறுப்பினர் ராஜன் கண்டனம்

சகா

கல்முனை மாநகரத்தில் தமிழர்களின் இருப்பை இல்லாதொழிக்கும் சதித்திட்டத்தின் ஓரங்கமாக, காணி பதியும் உரிமை கச்சிதமாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இவை ஒருபோதும் இன உறவை வலுப்படுத்த உதவாது; மாறாக, விரிசல்களை ஏற்படுத்தும். எனவே, இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; கல்முனை காணி பதிவகத்தில், காணி ஆவணங்கள் பதிவு நடவடிக்கைகள் பிரதேச செயலக ரீதியில் 2012 இல் இருந்து பதிவு செய்யப்பட்டு வந்தது.



13 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி, கல்முனை காணி பதிவகம் இயங்கி வருகிறது. காணி பதிவகத்தின் கீழ், கல்முனை வடக்கு செயலக பிரிவின் கீழ் உள்ள 29 கிராம சேவகர் பிரிவில் உள்ள காணிகள், இதுவரை காலமும் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்டு வந்தது.

கல்முனையின் இன வாதத்தையும் இனக் குரோதத்தையும் விதைத்து, அரசியல் செய்து வரும் வங்குரோத்து அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான அழுத்தத்தால், கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உரிய பதிவு நடவடிக்கை அனைத்தும், கல்முனை தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் மாற்றப்பட்டு உள்ளது.

பதிவாளர் நாயகத்தின் கடித்தின் பிரகாரமே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திலிருந்தும் 'தமிழ் பிரதேச காணிப் பதிவுகளை அங்கு பதியவேண்டாம். இனிமேல் எமது செயலகத்தின் பெயரின் கீழ் மட்டுமே பதியவேண்டும்' என பதிவாளர் அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இந்த விடயம், கல்முனையில் தமிழ் - முஸ்லிம் இன விரிசலை மேலும் வலுப்படுத்தி, அரசியல் ஆதாயம் பெறவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலனாய்வுகள் முடுக்கி விடப்பட்டிருப்பினும்

# நினைவேந்தல் சிறப்புறும்

சண்முகம் தவசீலன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள், எதிர்வரும் 18ஆம் திகதி சிறப்புற இடம்பெறுமென வட, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொது கட்டமைப்பின் இணைத் தலைவர்களில் ஒருவரான அருட்தந்தை லியோ அடிகளார் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இந்நிலையில், இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் கருத்துரைக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், "ஒவ்வொரு வருடமும் இடம்பெறுகின்ற நினைவேந்தலைப் போன்று, இம்முறையும் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு வடக்கு, கிழக்கு நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அதற்கான




ஆயத்த பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

"நினைவேந்தல் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமான முறையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் இடம்பெறும்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்துக்கு அருகில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு, புலனாய்வாளர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. பொலிஸாரும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது" என்றார்.

சாய்ந்தமருதில்

# துர்நாற்றம் தொடர்கிறது

## காரணம் கண்டறிவதில் இழுபறி

நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

சாய்ந்தமருதில் சில வாரங்களாக பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் தொடர்ந்தும் சுகாதார தரப்பினருக்கு முறைப்பாடுகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்தத் துர்நாற்றம் சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் எலும்புகள், மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதால் வரும் துர்நாற்றம் இது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

துர்நாற்றம் காரணமாக, குடியிருப்பு பிரதேசங்களில் மக்கள் பலத்த அசௌகரியங்களை அனுபவிப்பதாகவும், குறித்த பிரதேசத்திலிருந்து இடம்பெயர வேண்டிய நிலை உள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், பிரதேச சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர், பொலிஸார், ஊடகங்கள் என பலரும் சென்ற வாரம் முழுவதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கள விஜய ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

எனினும், அங்கிருந்து பாரியளவிலான தூர்நாற்றம் வெளிவர காரணிகள் இல்லையென்பதை அறிய முடிந்தது. இருந்தாலும் தொடர்ந்தும் வெளிவரும் துர்நாற்றத்துக்கான காரணத்தை கண்டறிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்திருந்த நிலையில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களால் முறைப்பாடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தலையிட்டு, தீர்வை பெற்றுத்தரவேண்டும் என்று பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையிலான சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர், நேற்று (09) கள விஜயமொன்றை மேற்கொண்டு விலங்கறுமனை நிலையை ஆராய்ந்தனர்.



வெளி நோயாளர் பிரிவின்

# நடவடிக்கைகள் இலத்திரனியலில்

எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் சகல நடவடிக்கைகளும் தற்போது இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வருபவர்களுக்கு இலத்திரனியல் சுகாதார அட்டை தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே, சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் சரியான விவரத்தை பதிந்து, இலத்திரனியல் அட்டையை பெற்றுக் கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்தை எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், குழந்தைகள் மற்றும் சிறுவர்களை அழைத்து வருபவர்கள் அவர்களுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வைத்தியசாலையால் வழங்கப்படும் சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேட்டை கொண்டு வருமாறும் டொக்டர் ஜாமீர் மேலும் கேட்டுள்ளார்.




தேசிய கல்வியியல் கல்லூரி

# ஆசிரியர் நியமனத்தை மீளாய்வு செய்யவும்

எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் வழங்கப்பட்டுள்ள தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கான நியமன பாடசாலைகள் குறித்து, மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நேற்று (09) குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.ஜீ.டபிள்யூ. திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தற்போதைய பொருளாதார நெருக்கடி, போக்குவரத்துப் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, ஆசிரியர்களின் வசிப்பிடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலைகள் வழங்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் கல்வியியல் கல்லூரி ஆசிரியர் நியமனம், பல ஆசிரியர்களுக்கு வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்தில் வழங்கப்பட்டுள்ளது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்தின் மூலமே பாடசாலையை சென்றடையக் கூடியதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சில பாடங்களுக்கு குறித்த பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடம் நிலவாத போதிலும் அங்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சில பிரதேசங்களில், குறித்த பாடத்துக்கு வெற்றிடம் நிலவிய போதிலும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேறு பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, இவ் விடயங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்து, இயன்றவரை அயல் வலய வெற்றிடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்.போதனாவில் போராட்டம்

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டமொன்று, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று (09) முன்னெடுக்கப்பட்டது.

'அடக்குமுறை ஊடாக தேசிய கொள்கைகளை அழித்து, அக்கிரமத்தில் ஆட்சி செய்கின்ற அரசே மக்கள் அபிப்பிராயத்துக்கு தலைவணங்கு' எனக்கோரி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக காலை 9 மணியளவில் ஒன்றுகூடிய வைத்தியர்கள், பணியாளர்கள், ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாணத்திலுள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும், இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றனர்.








# ரவீந்திரநாத் தாகூரின் 161ஆவது பிறந்த தினம்

## யாழில் அனுஷ்டிப்பு

செந்தூரன் பிரதீபன்

இந்தியாவின் பல்துறை அறிஞர் ரவீந்திரநாத் தாகூரின் 161ஆவது பிறந்ததின நிகழ்வு, யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலா மண்டபத்தில் நேற்று (09) கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய கைவினைப் பொருட்கள், இந்திய கலாசாரம் தொடர்பான ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டு, ரவீந்திரநாத் தாகூரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் கண்ணதாசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைத்துறை மாணவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பு மாணவர்களானால் வரையப்பட்ட இந்திய கலாசாரங்களை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



வடக்கில்

# நீரில் மூழ்கி மூவர் பலி

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் மூவர் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் (08) உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பூம்புகார் கடல், மண்கும்பான் சாட்டி பகுதிகளில் உள்ள கடலில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அரியாலை, பூம்புகார் கடலில் நீராடிய ஞானகாந்தன் ஜெயமதன் (வயது 36) என்பவரும், சாட்டி கடலில் நீராடிய அரியாலையை சேர்ந்த இராசரத்தினம் கணேசராசா (வயது 46) என்பவருமே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி, இரணைமடு குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு இருந்த கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மயூரன் (வயது 22) என்பவர் குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.



## கண்டியிலும்
# 'கோட்டா ஹோ கம' துவசம் செய்யப்பட்டது

### பொலிஸார் கடமை தவறியதாக குற்றச்சாட்டு

■ ஷேன் செனவிரத்ன


கண்டி, ஜோர்ஜ் ஈ.டீ. சில்வா பூங்காவுக்கு முன்பான அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' போராட்டக் களத்துக்கு வருகை தந்த சிலர், அங்கு கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாநகர சபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட குழுவினரே, அங்கு அராஜகத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, குறித்த 'கோட்டா ஹோ கம' போராட்டக் களத்தில் இருந்த மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திமுது அபேகோன் காயமடைந்து, கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போராட்டக் களமானது, கண்டி பொலிஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் அமைந்திருந்த நிலையில், சம்பவம் நடைபெற்று அரை மணித்தியாலம் செல்லும் வரை, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கண்டி தேசிய வைத்தியசாலையின் பணியாளர்கள், தமது கடமைகளிலிருந்து நேற்று விலகி, வைத்தியசாலையை விட்டு வெளியேறினர்.



## விசேட தேவையுடையவர்கள்
# வீடுகளை அமைக்க நிதியுதவி

■ என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் விசேட தேவையுடையவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் கீழ் புளத்கொஹுபிட்டிய, எட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள 26 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜிகா விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், 24 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.



## மாத்தளை நகர சபைக்கு
# செந்தில் தொண்டமான் விஜயம்

இ.தொ.கா.வின் தலைவர் செந்தில் தொண்டமான் மாத்தளை நகர சபைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மாத்தளை நகர சபையின் மேயராக பணியாற்றி வரும் காங்கிரஸின் உறுப்பினர் பிரகாஷின் அழைப்பையேற்று செந்தில் தொண்டமான் அங்கு சென்றார்.

மாத்தளை மாநகர சபை ஊடாக கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை இதன்போது ஆய்வு செய்தார். காங்கிரஸின் மாத்தளை மாவட்ட மூத்த தலைவர் சிவஞானம், சபை தலைவர் யோகராஜா, ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களுடன் மாத்தளை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.



# மண்ணெண்ணெய்க்காக எரிபொருள் நிலையம் முற்றுகை

■ எஸ்.கணேசன்

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக ஹட்டன், மல்லியப்பு பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை முற்றுகையிட்டு, மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சிறார்கள், யுவதிகள், தாய்மார், முதியவர்கள் என நேற்று (09) காலை 6 மணி முதல் வரிசையில் நின்றதுடன், சில தாய்மார்கள் கைக்குழந்தைகளுடன் வரிசையில் நின்றதையும் அவதானிக்க முடிந்தது.

வரிசையில் நின்ற முதியவர்களில் சிலர் தமக்கு மயக்கம் வருவதுபோல் இருப்பதாகவும், எனவே, முதியவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். கைக்குழந்தைகளுடன் வந்திருந்த தாய்மாரும் இதே கோரிக்கையை விடுத்தனர்.

சிறார்கள் பாடசாலைகளுக்கு செல்லாமலும், தோட்ட மக்கள் தொழிலுக்கு செல்லாமலுமே மண்ணெண்ணைய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருக்கின்றனர்.










# செயலமர்வு...

■ பி.கேதீஸ்

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக, நுவரெலியா கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒரு நாள் ஆங்கில செயலமர்வு நுவரெலியா வலய கல்வி காரியாலத்திலும் தலவாக்கலை தேசிய பாடசாலையிலும் நடைபெற்றது. இதன்போது மத்திய மாகாண கல்வி பணிமனையின் ஆங்கில பாட பணிப்பாளர் சாமரி அன்தாஜ், நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவி கல்வி பணிப்பாளர் வி.சாந்தகுமார் மற்றும் வளவாளர்கள் உட்பட ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# யானை தாக்கி ஆசிரியர் பலி

■ அருணகுமார

மாத்தளை, நாவுல பிரதேச செயலகப் பிரிவின் மொரகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஆசிரியர் ஒருவர், யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (08) இரவு பத்து மணியளவில் மரண வீடு ஒன்றுக்குச் சென்று திரும்பியபோதே, 44 வயதான குறித்த ஆசிரியர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக யானை - மனிதன் மோதல் அதிகரித்து வருவதுடன், இதுவரை பலர் உயிரிழந்துள்ளதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.




## சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக
# டி.பீ.ஜீ.குமாரசிறி நியமனம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக டி.பீ. ஜீ.குமாரசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளராக பல வருடங்கள் கடமையாற்றிய அவர், ஓய்வுபெற்ற நிலையில் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த அமைச்சுக்கு புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்ட நிலையில், சமுர்த்தி அமைச்சின் செயலாளராக தற்போது நியமனம் பெற்றுள்ளார்.



## வெளிநாட்டு செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும்
# அன்னையர்களுக்கு உரிமையை வழங்கு

■ எஸ்.கணேசன்

அன்னையர்களை கௌரவிக்கும் முகமாக பிரிடோ நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த சர்வதேச அன்னையர் தினம் 'வெளிநாட்டு செலாவாணியைப் பெற்றுக்கொடுக்கும் அன்னையர்களுக்கு உரிமையை வழங்கு' எனும் தொனிப்பொருளில் டிக்கோயா நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது.

இதில் அன்னையர்கள் மகிழ்வுறும் வகையில் அவர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் 'அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் அன்னையரின் பாதுகாப்பை உறுதி செய்', 'தாய்மார்களின் உரிமைகளை அரசு உறுதி செய்ய வேண்டும்', 'குடும்ப வலுத்திட்டத்தை நடைமுறைப்படுத்து' போன்ற வாசகம் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோசமிட்டனர்.



இந்நிகழ்வில் பிரிடோ நிறுவனத்தின் உதவி நிறைவேற்று பணிப்பாளர் சந்திரசேகரம், இணைப்பாளர் கே.புஸ்பராஜ், அமரசெல்வம், பெண்கள், யுவதிகள், தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

# சூரியகாந்தி மூதாட்டி சடலமாக மீட்பு

■ ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரியகாந்தி தோட்ட குடியிருப்பிலிருந்து 71 வயது பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான 71 வயதான சிவமணியம்மாவே தன்னுயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண், சுகவீனமுற்றிருந்த நிலையில், தனது இளைய மகளின் அரவணைப்பில் வசித்து வந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் நேற்றுமுன்தினம் (8) காலை இவர், இராகலை பிரதேச வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்து வந்துள்ளதுடன், இரவு உணவுக்குப் பின்னர் நித்திரைக்குச் சென்றதாகவும் அவரது மகள் தெரிவித்துள்ளார்.



நேற்று (9) காலை ஏழு மணிவரை தாய் நித்திரையிலிருந்து எழும்பாததை அவதானித்த மகள், தாயின் அறையை திறக்க முற்பட்ட போது, கதவு உள்பக்கமாக மூடப்பட்டிருந்ததாகவும் பின் அயலவர்களின் உதவியுடன் அறையை திறந்து பார்த்த போது, தாய் சடலமாகக் காணப்பட்டதாகவும் மகள் தெரிவித்துள்ளார்.

இராகலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# நிரபராதிகள் மீதான அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தன தாக்குதல்

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக ஒரு மாதகாலமாக காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட 'கோட்டா ஹோ கம', அலரிமாளிகையின் முன்பாக 13 நாள்களாக நடத்தப்பட்ட 'மைனா ஹோ கம' மீது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் குண்டர்களால் நேற்று (09) மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; அவை கண்டிக்கத்தக்கவை. உலக வங்கி, மனித உரிமை நிறுவனங்கள் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகள், நாடுகள் இத்தாக்குதல் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு பொருளுக்கும் பல நாள்களாக நீண்ட வரிசையில் நின்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதை அடுத்தும், அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, தாங்கிக்கொள்ள முடியாத விலை அதிகரிப்பை அடுத்துமே, ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்தன.

ஜனாதிபதியையும் பிரதமரையும் முழு அமைச்சரவையையும் இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது. இறுதியில் 225 பேரும் வீட்டுக்குச் செல்லவேண்டுமென்ற கோஷம் வலுப்பெற்றது. இந்நிலையில்தான், 'கோட்டா ஹோ கம'வும், அதற்குப் பின்னர், 'மைனா ஹோ கம'வும் உருவாக்கப்பட்டன. அதன் கிளைகளும் ஆங்காங்கே முளைத்தன.

மேற்படி கிராமங்களிலும், அதன் கிளைகளிலும் எந்தவோர் அசம்பாவிதமும் கடந்த 30 நாள்களில் சம்பவிக்கவில்லை. தங்களுடைய மனக்கிலேசங்களை, ஒவ்வொருவரும் போராட்டக்களத்தில் வெளிப்படுத்தினர். போராட்டங்கள் பல தளங்களுக்குச் சென்று விரிவடைந்தன.

திரைப்பட பாணியிலான வசனத்தில் கூறுவதாயின் 'தானா சேர்ந்த கூட்டம்' என்பது போல் மக்களின் சுயஆதரவு பெருகியது. எனினும் நேற்றைய (09) சம்பவத்தில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் வகையில், அழைத்துவரப்பட்ட கைகூலிகளுக்கு 2,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக, பிணைக்கைதிகளாக சிக்கிக்கொண்டவர்கள் ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளனர்.

'சூடான' பானமும் வாய்க்கு ருசியான நொறுக்குத் தீனிகளும், தங்களை மெய்மறக்கச் செய்துவிட்டுள்ளன. அதனோர் அங்கமாகவே 'மைனா ஹோ கம' தாக்கப்பட்டு, எரியூட்டப்பட்டது; வன்முறையும் அங்கிருந்த ஆரம்பிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் என்றாலே, தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனத்துடன் தயாராக இருக்கும் பொலிஸார், அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் அலரிமாளிகைக்கு முன்பாக, ஆர்ப்பாட்டம் நடக்கவிருக்கிறது என்பதை அறிந்திருந்தும் தயாராக இருக்கவில்லை. பொலிஸார் கைகட்டி, வாய்பொத்தி பார்த்துக்கொண்டிருந்தனர்.

இரும்புக் கம்பிகள், குண்டாந்தடிகளுடன் ரகளையில் ஈடுபட்டிருந்த மஹிந்தவுக்கு ஆதரவான குழு, 'கோட்டா ஹோ கம'வுக்குச் சென்று, போராட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டது. பெண்களெனப் பார்க்காது இழுத்துப் போட்டு தாக்கியது. எதிர்க்கட்சித் தலைவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது விரைந்துவந்த தண்ணீர் பீச்சியடிக்கும் பொலிஸ் வாகனம், போராட்டக்காரர்களை விட்டுவிட்டு, 'கோட்டா ஹோ கம' மீது தண்ணீர் பீச்சியடித்தது. ஆக, எல்லாமே திட்டமிட்ட முறையில் அரங்கேற்றப்பட்டமை அம்பலம்!

இந்தத் தாக்குதல்கள் மூலமாக, இழைக்கக்கூடாத தவறு ஒன்றை அரசாங்கம் இழைத்துள்ளது. இதுதான், 'சொந்த செலவில் சூனியம் வைக்கும் செயற்பாடு' என்பது! அதுமட்டுமன்றி, நிரபராதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான தாக்குதலாகும். இதனை நாமும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

முழுமையான களிப்பு நிலையில், நெஞ்சத்தில் துணிவு உண்டாகின்றது. இதனால் வெற்றிகள் சுரக்கின்றன.

ஆனால், துன்பங்கள் அடிக்கடி உருவானால், மக்கள் சுருண்டு விடுகின்றார்கள். ஆனால், திட சிந்தனையில் பிரச்சினைகளைத் தாங்கி எழுந்திருப்பவரே இன்பத்துடன் இணைகின்றார்.

எதிர்ப்புகள் எம்மை வீரபுருசராக மாற்றும். அதிதீவிர போராட்டங்களே துணிச்சலைப் பிறப்பிக்கின்றன. கஷ்ட, நட்டங்கள் தொடர்வதில்லை என்பதை உணர்க!

சும்மா கிடைக்கும் கொடுப்பனவுகள், நிரந்தரமான வெற்றிகளுக்கு உதவாது. எதிர்ப்புகளை எரித்து வெற்றி கொள்வதே நிரந்தரமானது.

எல்லோரும் மனிதர்களே! எல்லோருக்கும் சிறப்பாகப் பணியாற்ற முடியும். உயர்வுநிலை ஒருசிலருக்கு மட்டுமே சொந்தமானதும் இல்லை. உங்களை நீங்களே வெல்வீர்களாக!

எவருடனும் போட்டி போடத்தேவையில்லை. உங்கள் செயல்களை ஒத்திவைத்தல் கூடாது. உடனுக்குடன் கருமங்களை கூடிய வரையில் முடித்தல் வேண்டும்.

நம்பிக்கையின் மூலமே வாழ்க்கை சிருஷ்டிக்கப்படுகின்றது. எந்தக் கருமங்களுக்கும் தயார் நிலையில் இருக்கவும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கூட்டு நாடகமும் கோமாளிகளும்

மொஹமட் பாதுஷா

ஒரு நோயை உரிய காலத்தில் சரிவர குணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், அது அதைவிடப் பாரதூரமான நோய் நிலைமைக்கு இட்டுச் செல்லும். இலங்கையும் அந்த நிலையில்தான் இப்போது இருக்கின்றது.

மக்கள் இந்தளவுக்கு வீதிக்கு இறங்கி போராடிக் கொண்டிருக்கின்ற போதிலும், நாட்டின் பொருளாதார, அரசியல் நிலைமைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், போராட்டக்காரர்கள் மீது பலப்பிரயோகம் செய்வது குறித்துத்தான் ஆட்சியாளர்கள் சிந்திக்கின்றார்கள்.

அரசாங்கத்தில் மட்டுமல்லாமல், எதிர்க்கட்சியிலும் தமிழ், முஸ்லிம் கட்சிகளிலும் உள்ள அரசியல்வாதிகள் மேற்கொள்கின்ற மக்களை மறந்த நகர்வுகளும் சுயலாப அரசியல் நாடகங்களும், இந்த நோயைக் குணப்படுத்த குறைந்தபட்ச பங்களிப்பைக் கூட வழங்கவில்லை.

'இதோ பிரதமர் இராஜினாமாச் செய்யப் போகின்றார்' என்று ஒரு செய்தி வருகின்றது. அதனை வாசித்து முடிப்பதற்கு இடையில், 'இல்லையில்லை, அது தவறான செய்தி' என்று மறுப்பறிக்கை வந்து விடுகின்றது. 'இடைக்கால அரசாங்கத்துக்கு ஜனாதிபதி பச்சைக்கொடி' என்று வெளியாகி, அடுத்த முப்பது நிமிடங்களுக்குள் 'அது அப்படியில்லை, இப்படித்தான்' என்று இன்னுமொரு செய்தி வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் அரசியல் எந்தளவுக்கு ஸ்திரமற்று இருக்கின்றது என்பதற்கும், மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் அரசியல் நகர்வுகளும் பொறுப்பற்ற விதத்திலான முடிவுகளும் எடுக்கப்படுகின்றன என்பதற்கும் இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

இதனையெல்லாம் தாண்டி, இந்த வாரம் சில மாற்றங்கள் நிகழவும் வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எது எப்படியிருப்பினும், மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கே முன்னுரிமை தந்து உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். என்றாலும், ஆட்சி மாற்றம் அல்லது 'ஆட்சி முறைமை' மாற்றத்திற்கான ஆரம்பம் என்ற வகையில், அரசியல் ரீதியான அடுத்தகட்ட நகர்வுகள் பற்றித்தான் பெரிதும் பேசப்படுகின்றது.

யாப்புத் திருத்தங்கள், ஆட்சிமுறை மாற்றத்திற்கான ஏற்பாடுகள் போன்றன நீண்டகால அடிப்படையில் செய்யப்பட வேண்டியவை. மக்களின் அவசர கோரிக்கைகளை நிறைவேற்றாமல் இவ்வாறான விவகாரங்களில் நேரத்தை செலவழிப்பது, உரிய பலனை தராவிட்டால் கடைசியில் அது நேர விரயமாகவே வந்து முடியும் என்று இதற்கு முன்னர் வெளியான பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதற்கு பிரதி சபாநாயகர் தெரிவு நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. முன்னர் குறிப்பிட்டிருந்ததைப் போல இது நேரத்தையும் செலவையும் வீணடித்த ஓர் அரசியல் நாடகமாகவே ஆகியிருக்கின்றது. மக்களை மறந்த, மையப்புள்ளிக்கு அப்பாலான எல்லா நகர்வுகளும் இதுபோன்ற விளைவுகளையே கொண்டுவரும்.

இந்தப் பின்னணியில் நோக்குகின்ற போது, பொதுவாக இன்றைய அரசியல் சூழலில் எல்லா தரப்புகளும் நாடக பாணியிலான நகர்வுகளையே மேற்கொள்வதாக தெரிகின்றது.

அதாவது, 'சுயாதீனம்' என்று சொல்கின்ற எம்.பிக்கள், 'நாங்கள் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு' சொல்கின்றவர்கள் எல்லோரும் மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு, மக்களுக்கு இன்னொன்றைச் சொல்கின்றார்கள். கடைசியில், முக்கியமான தருணத்தில் 'பல்டி' தீர்மானங்களை எடுத்து விடுகின்றார்கள். எல்லாம் யாரோ எழுதிய நாடகம் போல நடந்தேறுகின்றது. ஆனாலும் என்ன, இவர்களுக்கு ஒழுங்காக நடிக்கக் கூட தெரியவில்லை என்பதுதான் மக்களின் கணிப்பாகும்.

அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இப்போது செயற்படுகின்ற விதம் மக்களுக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, ஒருவரை ஒருவர் பாதுகாக்கும் தோரணையில் அல்லது பாதிக்காத வகையில் செயற்படுவதான தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது.

பிறமொழி திரைப்படம் ஒன்றின் கதையை அடிப்படையாகக் கொண்டு, உள்நாட்டு ரசிகர்களுக்கு ஏற்றாற்போல படங்களை தயாரிப்பது போல, வெளிநாட்டு, உள்நாட்டு ஆதிக்க அரசியல் சார்ந்த திரைக்கதையை அடிப்படையாக வைத்து, எல்லாப் பெருந்தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டு நாடக அரசியலை முன்கொண்டு செல்ல முனைவதாகவே தோன்றுகின்றது.

இந்த நாடகத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நல்ல சம்பளத்துடன் 'கோமாளிகள்' வேசம் ஏற்றுள்ளார்கள். ஆனால், நாடகத்தின் உண்மையான கதை அவர்களுக்கு தெரியாது. படப்பிடிப்பு நடைபெறுகின்ற நாளில் மாத்திரம், 'இப்படி நடித்தால் போதுமானது' என்று அவர்களுக்கு சொல்லப்படுகின்றது.

மலையக அரசியல்வாதிகள் இன்னுமொரு தடவை மக்களை ஏமாற்ற வேடம் தரிக்கின்றனர். இந்த நாட்டில் உண்மையாகவே வஞ்சிக்கப்பட்ட மக்களாக மலையக சமூகம் இருக்கின்ற போதிலும், லயன் குடியிருப்புகளைப் போல மலையக அரசியலும் இன்னும் முன்னேறவில்லை என்பது தெரிகின்றது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அநேக தமிழ் அரசியல்வாதிகள், இதனை பொதுவான நாட்டுப் பிரச்சினையாக பார்க்கின்றனர். ஆனால், ஒரு சில தமிழ் எம்.பிக்கள் பொதுவான பொருளாதார, அரசியல் நெருக்கடிகளோடு இனப்பிரச்சினையை போட்டுக்கு குழப்பியடித்து, இன்னும் கொஞ்சக்காலம் தமிழ் சனங்களை உச்சாணிக் கொம்பில் வைத்திருக்க விளைகின்றனர்.

இதேவேளை. ஆளும் மற்றும் எதிரணிகளின் நிகழ்கால போக்குகள், இவர்களுக்கு இடையில் திரைமறைவு டீல்கள் உள்ளனவா? அதனடிப்படையில் மக்களை ஏமாற்ற நாடகமாடுகின்றார்களா என்ற நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனால், முன்னதாக அரசாங்கத்தின் மீதிருந்த மக்களின் கோபம் எதிர்க்கட்சிகளை நோக்கியும் திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இப்போது எந்த நாடாளுமன்ற உறுப்பினர் யார் பக்கம் இருக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது. சிலவேளை அவர்களுக்கு கூட அந்தக் குழப்பம் இருக்கலாம். ஆனால், ஆளும் எதிர்க்கட்சியில் உள்ள எம்.பிக்களில் 95 சதவீதமானோர் மக்களின் பக்கம் இல்லை என்பது தெளிவாகப் புரிகின்றது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் 'பதவி' எனும் எலும்புத் துண்டுகளின் பக்கம் நிற்கின்றார்கள். பலர் மதில்மேல் பூனையாக உலாவிக் கொண்டிருக்கின்றார்கள். எந்தப் பக்கம் 'எலும்புத் துண்டுகள்' சிக்குமோ அந்தப் பக்கம் பாய்வதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்றும் கூறலாம்.

சுருங்கக் கூறின், நூறு சதவீதமான முஸ்லிம் எம்.பிக்களும் ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளும் மக்களுடன் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் பேசிய வீராப்பு பேச்சுகளை நினைத்தால் இப்போது சிரிப்பும் ஆத்திரமும்தான் வருகின்றது. மக்களை காப்பாற்றுவதற்காக வானில் இருந்து வந்த மீட்பர்கள் போலவும், சமூகத்திற்காக உயிரைக் கொடுப்போம் என்பது போலவும் பிரசாரம் செய்தவர்களை, இப்போது மக்கள் ஒன்றுபட்டு நிற்கின்ற செயற்பாட்டுக் களத்தில் காண முடியவில்லை. கொஞ்சப்பேர் மொட்டுக்கு முட்டுக் கொடுக்கின்றனர். மீதமுள்ளோர், பெருந்தேசியக் கட்சிகளின் 'பொது வேலி'யில் நிற்கின்றனர்.

"இந்த சமூகத்திற்காக பதவி, பணத்திற்கு சோரம் போக மாட்டோம். ஏன், நாடாளுமன்ற உறுப்பினருக்கான இதர வெகுமதிகளைக் கூட பெற மாட்டோம்" என்று சொன்ன எம்.பிக்களும் முன்னாள் முஸ்லிம் எம்.பிக்களைப் போலவே பகிரங்கமாக நக்குண்டு நாவிழந்து போயிருக்கின்றனர்.

ஆக, குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளும் பொதுவாகக் குறிப்பிட்டால் மக்களை மனதிற் கொள்ளாத ஏனைய சிங்கள, தமிழ் அரசியல்வாதிகளும் 'கோட்சூட்' கிடைக்கும் என்ற கனவில் மிதக்கின்றனர் எனலாம்.

இறைமை என்பது மக்களிடம் உள்ளது. அது முற்றுமுழுதாக மக்களுக்கு உரித்தானதாகும். அதனைத்தான் மறைமுகமாக மக்கள் ஆட்சியாளர்களுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் ஆணையாக வழங்குகின்றனர். எனவே மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டிய கடப்பாடு அனைத்து அரசியல்வாதிகளுக்கும் உள்ளது. இதில் நிறைவேற்றதிகாரத்தில் இருப்பவர்களும் விதிவிலக்கல்லர்.

இன்று மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறே கோருகின்றனர். அதனை இந்த அரசாங்கத்தால் செய்ய முடியாது என்பது பெருமளவுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதால் 'நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்' என்று சொல்கின்றனர். இதில் எந்த குழப்பங்களோ மயக்கங்களோ கிடையாது.

எனவே, அரசாங்கத்தின் முன்னால் இரு தெரிவுகள் உள்ளன. ஒன்று, உடனடியாக பிரச்சினைகளை தீர்ப்பது. அல்லது அதிகாரத்தை விட்டு ஒதுங்கிக் கொள்வது.

அதேபோன்று, ஆளும் மற்றும் எதிர்த்தரப்புக்கு முட்டுக் கொடுப்பதையே தமது கடமை என நினைத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம், தமிழ் அரசியல்வாதிகள் இச்சந்தர்ப்பத்தில் இரு விதமான நிலைப்பாடுகளை எடுக்கலாம்.

ஒன்று, குறுகிய காலத்திற்குள் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு திராணி இருக்குமென்றால் (?) அவர்களுடன் இணைந்து பணியாற்றுதல். இரண்டாவது, அது சாத்தியமில்லை என்பது தெரிந்தால், உடனடியாக மக்களின் பக்கம் வருதலாகும். ஆனால், சிறுபான்மை அரசியலில் இது இரண்டும் நடக்கவில்லை.

மக்களின் கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க மறுக்கின்ற போது, அந்தக் களநிலையை வெளிநாட்டுச் சக்திகள் எவ்விதம் குழப்பி விட்டன என்பதற்கு உலகில் பல அனுபவங்கள் உள்ளன.

இலங்கையின் புவியியல் அமைவிடத்திலும் அது கொண்டுள்ள வளங்களிலும் அமெரிக்காவும் சீனாவும் இந்தியாவும் கண்வைத்துள்ளன என்பது இரகசியமல்ல.

இப்பின்னணியில், மக்கள் போராட்டங்களை பொறுப்புவாய்ந்தவர்கள் தட்டிக் கழித்தால், இதனை யார் யார் கையில் எடுப்பார்கள், யார் புகுந்து விளையாடுவார்கள் என்பது சாதாரண மக்களுக்குத் தெரியாவிட்டால் கூட அரசாங்கத்திற்கும் எதிர்த்தரப்பு அரசியல் தலைவர்களுக்கும் தெரியும்.

அப்படியிருந்தும் கூட, இவ்விவகாரத்திற்கு ஓர் ஆக்கபூர்வமான தீர்வை விரைந்து காணாமல் இன்னும் நாடகம் நடிக்க அல்லது படம்காட்ட முற்படுவது அபத்தமானதும் ஆபத்தானதுமாகும்.

## கடிதங்கள்

### எரிவாயு தட்டுப்பாட்டால் உணவகங்கள் பாதிப்பு

சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக திருகோணமலை, தோப்பூர் பகுதியில் உள்ள பல உணவகங்கள் மூடப்பட்டுக் காணப்படுகின்றன.

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் தோப்பூர் பகுதியிலுள்ள தேநீர் கடைகள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவகங்கள் மூடப்பட்டுக் காணப்படுகின்றன. இதனால் உணவகங்கள், வெதுப்பகங்களில் வேலை செய்யும் பலர் தொழிலை இழந்துள்ளனர்.

மாதாந்த கடை வாடகை உள்ளிட்டவைகளை கொடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் உணவகங்கள், வெதுப்பகங்களின் உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடைக்கு உணவு வாங்க வருகைதருவோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். ஒரு எரிவாயு சிலிண்டரைப் பெறுவதற்கு திருகோணமலை நகருக்கு ஓட்டோவுக்கு 3,000 ரூபாய் செலவிட வேண்டியுள்ளது. சில வேளை ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியுள்ளது. இந்த அரசாங்கம் மக்களை வரிசையில் நின்று போராட வைத்துள்ளது. பாண் வாங்குவற்குகூட, மக்கள் கஷ்டப்படுகின்றார்கள்.

எரிவாயு இல்லையென்று காட்டுக்கு விறகெடுக்க போனாலும் பொலிஸார் பிடிக்கின்றனர். என்ன செய்வதன்றே தெரியாமல் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். அந்தளவிற்கு அரசாங்கம் மக்களை கஷ்டத்தின் மத்தியில் தள்ளியுள்ளது.

இவ்வாறு எரிவாயு இல்லாமல் உணவக தொழில் சார்ந்தோரும் மிகுந்த துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.

–தீஷான் அஹமட்

# மனவேதனையில் நடிகை!



பிரபல தமிழ் தொலைக்காட்சி நடிஅடையாளம் தெரியாமல் மாறிய அனுயா

எம் ராஜேஷ் இயக்கத்தில் ஜீவா நடித்த 'சிவா மனசுல சக்தி' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை அனுயா. அதன்பிறகு 'மதுரை சம்பவம்' 'நகரம்' 'நஞ்சுபுரம்' 'நண்பன்' 'நான்' உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்தார்.

சமூக வலைதளங்களில் ஆக்டிவ்வாக இருக்கும் நடிகை அனுயா சமீபத்தில் செல்பி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோவில் அவர் ஆளே அடையாளம் தெரியாமல் குண்டாக இருப்பதை அடுத்து ரசிகர்கள் 'சிவா மனசுல சக்தி' படத்தில் நாங்கள் ரசித்த அனுயாவா இவர்? என்று கமெண்ட்ஸ் பகுதியில் பதிவு செய்துவருகின்றனர்.கை ரக்சிதா 'பிரிவோம் சந்திப்போம்' என்ற தொடரின் மூலம் அறிமுகமாகி அதன் பிறகு 'சரவணன் மீனாட்சி' தொடரில் கவின் ஜோடியாக நடித்தார்.

இந்நிலையில் தன்னுடன் இணைந்து நடித்த தினேஷ் என்பவரை காதலித்து கடந்த 2015ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டரஞ்சிதா கடந்த ஒரு ஆண்டாக கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருப்பதாக கூறப்படுகிறது.


இந்த நிலையில் ரக்சிதா தற்போது 'சொல்ல மறந்த கதை' என்ற தொடரில் நடித்து வருகிறார். இந்த தொடரில் கணவனை இழந்து, இரு குழந்தைகளை வளர்க்க போராடும் கேரக்டரில் நடித்து வருவதாக பேட்டி ஒன்றில் ரக்சிதா கூறியுள்ளார்.

மேலும் இந்த கேரக்டர் தனது சொந்த வாழ்க்கையோடு சில சமயங்களில் ஒத்துப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளதை அடுத்து கணவரை பிரிந்துள்ளதை அவர் மறைமுகமாக கூறியுள்ளதாக தெரிகிறது.

மேலும் தனிமை தனக்கு மன வேதனையை தந்தாலும் இந்த கேரக்டரில் இருப்பது போல் தனிமையை சந்திக்கும் துணிவும் தைரியமும் தனக்கும் இருப்பதாக ரக்சிதா கூறியுள்ளார்.

## குழந்தையுடன் பிரியங்கா

அமெரிக்க பாடகர் நிக் ஜோன்ஸ் என்பவரை கடந்த 2018ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட பிரியங்கா சோப்ராவுக்கு, வாடகைத் தாய் மூலம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு குழந்தை பிறந்தது.



இந்த குழந்தை மருத்துவரின் கண்காணிப்பு சில வாரங்கள் இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியதை அடுத்து தற்போது தான் குழந்தையுடன் பிரியங்கா-நிக் ஜோன்ஸ் தம்பதியினர் வீட்டுக்கு சென்றுள்ளனர்.



இதனையடுத்து தனது குழந்தையின் புகைப்படத்தை முதல் முதலாக பிரியங்கா சோப்ரா தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து உள்ள நிலையில் இந்த புகைப்படம் தற்போது இணையதளங்களில் வைரலாக வருகிறது.

## சாய்பல்லவியின் சர்ப்ரைஸ்!



தமிழ், தெலுங்கு, மலையாள திரையுலகின் முன்னணி நடிகையாக இருக்கும் சாய்பல்லவி நேற்று தனது பிறந்தநாளை கொண்டாய நிலையில் தனது ரசிகர்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் அளித்துள்ளார் .

'பிரேமம்' என்ற திரைப்படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமான நடிகை சாய் பல்லவி அதன் பின்னர் 'தியா', 'மாரி 2', 'என்.ஜிகே' உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்தார்.

இந்த நிலையில் சாய் பல்லவி நடிக்கும் மூன்று மொழி திரைப்படத்தின் தலைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்துக்கு 'கார்கி' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மூன்று மொழிகளில் உருவாகிவரும் இந்தத் திரைப்படத்தை கௌதம் ராமச்சந்திரன் என்பவர் இயக்கியுள்ளார்.

96 படத்தின் மூலம் பிரபலமான இசை அமைப்பாளர் கோவிந்த் வசந்தா இசையமைப்பில் உருவாகி வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் இந்த படத்தின் டீசர் விரைவில் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமந்தாவின் கட்டிப்பிடி வாழ்த்து

பிரபல தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா உடன் நடிகை சமந்தா ஒரு திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சமந்தாவின் பிறந்தநாள் காஷ்மீரில் விஜய்தேவரகொண்டா மற்றும் படக்குழுவினருடன் கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் இன்று விஜய் தேவர்கொண்டாவின் பிறந்தநாள் கொண்டாட்டமும் அதே படக்குழுவினர்களால் காஷ்மீரில் கொண்டாடப்பட்டுள்ளது.



இதனை அடுத்து சமந்தா விஜய் தேவரகொண்டாவை கட்டிப் பிடித்து தனது வாழ்த்துக்களை கூறியுள்ளார்.

சமந்தா பதிவு செய்த புகைப்படம் மற்றும் வாழ்த்து தற்போது வைரலாகி வருகிறது.

## மனவேதனையில் நடிகை!

பிரபல தமிழ் தொலைக்காட்சி நடிகை ரக்சிதா 'பிரிவோம் சந்திப்போம்' என்ற தொடரின் மூலம் அறிமுகமாகி அதன் பிறகு 'சரவணன் மீனாட்சி' தொடரில் கவின் ஜோடியாக நடித்தார்.

இந்நிலையில் தன்னுடன் இணைந்து நடித்த தினேஷ் என்பவரை காதலித்து கடந்த 2015ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டரஞ்சிதா கடந்த ஒரு ஆண்டாக கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் ரக்சிதா தற்போது 'சொல்ல மறந்த கதை' என்ற தொடரில் நடித்து வருகிறார். இந்த தொடரில் கணவனை இழந்து, இரு குழந்தைகளை வளர்க்க போராடும் கேரக்டரில் நடித்து வருவதாக பேட்டி ஒன்றில் ரக்சிதா கூறியுள்ளார்.

மேலும் இந்த கேரக்டர் தனது சொந்த வாழ்க்கையோடு சில சமயங்களில் ஒத்துப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளதை அடுத்து கணவரை பிரிந்துள்ளதை அவர் மறைமுகமாக கூறியுள்ளதாக தெரிகிறது.

மேலும் தனிமை தனக்கு மன வேதனையை தந்தாலும் இந்த கேரக்டரில் இருப்பது போல் தனிமையை சந்திக்கும் துணிவும் தைரியமும் தனக்கும் இருப்பதாக ரக்சிதா கூறியுள்ளார்.



சென்னை

இலங்கைக்கு அனுப்பும் அரிசி பற்றி

# வதந்தி பரப்பினால் நடவடிக்கை

இலங்கைக்கு அனுப்பும் அரிசி பற்றி வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக உணவுப்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகக் கடுமையான துன்பத்திலிருக்கும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவெடுத்து, மத்திய அரசின் அனுமதியைக் கோரியிருந்தார். அனுமதி கிடைத்தவுடன் அரிசி உள்ளிட்ட பொருட்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தினார்.

அதன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி இறுதிப்படுத்திட தாமதமாகும் நிலையில் உடனடியாக நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்காக வெளிப்படைத் தன்மையுடன் அரிசி ஆலை அதிபர்களின் சங்கங்களை அழைத்துப் பேசி, குறுகியகாலத்தில் உற்பத்தி செய்ய முடிந்த 51 ஆலைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு விநியோக ஆணைகள் வழங்கப்படுகின்றன.

இலங்கை அரசு, ஏற்கெனவே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து உள்ள அரிசிக்கு இணையான, ஆந்திரா பொன்னி, ஏடிட்டி45, கோ51 போன்ற உயர் ரக அரிசி இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டு, 10 கிலோ கிராம் பைகளில் அனுப்பப்பட உள்ளது. இவற்றை சென்னை, தூத்துக்குடி துறைமுகங்களுக்கு அனுப்புவதற்கான போக்குவரத்துச் செலவு, பை உட்பட கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.33.50 என்ற குறைந்த விலையில் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சில விஷமிகள் வழக்கமாக விஷத்தைக்கக்கும் விதமாக, இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கிலோ கிராம் ஒன்றிற்கு 20 ரூபாய்க்கு வாங்காமல் அதிகமாகக் கொடுத்து வாங்கிவிட்டது போல் சமூக ஊடகங்களில் எழுதுகின்றனர். இது தவறான பொய்ப் பிரச்சாரமாகும்.

அரிசி அனுப்பப்படும் முறைமைகள் தொடர்பில் உண்மைகள் முழுமையாகத் தெரிந்திருந்தும் அவதூறு செய்ய வேண்டும் என்பதற்காகவே சிலர் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு அவதூறு பரப்புவோர் மீது சட்டபூர்வமான நடவடிக்கையை எடுக்க அரசு தயங்காது என்றார்.

புதுடெல்லி

# பனி லிங்கத்தை வழிபட 1.5 இலட்சம் பேர் முன்பதிவு

ஜம்மு-காஷ்மீரில் உள்ள அமர்நாத்குகைக் கோவிலில் இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசிக்க அமர்நாத் யாத்திரை ஆண்டுதோறும் நடைபெறும். எனினும், கொரோனா தொற்று காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக யாத்திரை நடைபெறவில்லை.

இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை ஜூன் 30 ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 11ஆம் திகதி நிறைவடைகிறது.

இந்நிலையில் யாத்திரைக்கான முன்பதிவு தொடங்கிவிட்டது. 13 வயதுக்கு மேற்பட்டோர், 75 வயதுக்கும் குறைவானவர்கள் மட்டுமே யாத்திரையில் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.



தற்போது முன்பதிவு ஆரம்பிக்கப்பட்டு 26 நாள்கள் முடிந்துவிட்டது. இதுவரையிலும் 1.5 இலட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். 2019 ஆம் ஆண்டுடன் இந்த ஆண்டை ஒப்பிடும்போது முதல் 26 நாள்களில் பதிவானோர் எண்ணிக்கை 246 சதவீதம் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை

# ரூபாய்க்கு இட்லி விற்கும் பாட்டிக்கு வீடு

ஒரு ரூபாய்க்கு இட்லி விற்பனை செய்து வரும் கோவை வடிவேலம்பாளைத்தைச் சேர்ந்த கமலாத்தாள் பாட்டிக்கு வீடு கட்டி கொடுப்பதாக கொடுத்த வாக்கை அன்னையர் தினமான மே. 8 நிறைவேற்றி வீடு வழங்கி சிறப்பித்துள்ளார் தொழிலதிபர் ஆனந்த் மஹிந்திரா.



கோவை கமலாத்தாள் பாட்டி குறித்து சமூக ஊடகங்களில் பரவிய செய்திகளையடுத்து, அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலரும் தங்களது ட்விட்டர் பக்கத்தில் பாட்டி குறித்த தகவல்களை பகிர்ந்திருந்தனர்.

இந்நிலையில் தொழிலதிபர் ஆனந்த் மஹிந்திராவும், கமலாத்தாள் பாட்டிக்கு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியின்படி அன்னையர் தினத்தனது. அவருக்காக கட்டி முடிக்கப்பட்ட வீட்டைப் பரிசாக வழங்கி சிறப்பித்துள்ளார்.

சென்னை

# இலங்கையில் விறகுகளாகும் தமிழக விசைப்படகுகள்

இலங்கை கடற்படையில் சிறைபிடிக்கப்பட்டு, ஏலம் விடப்பட்ட விசைப்படகுகள், சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக விறகுகளாக விற்கப்படுவது தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி 200க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களின் விசைப்படகுகளை இலங்கை கடற்படை பறிமுதல் செய்துள்ளது. அந்தவகையில், கடந்த பிப்ரவரி மாதம் 200க்கும் மேற்பட்ட விசைப் படகுகள. ஏலம் விடப்பட்டது.



அதில் 130க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலில் நீண்ட காலமாக நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு இருந்ததால், பழுது பார்க்க முடியாத நிலையில் இருந்தன. அவைகள் யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் உள்ள திறந்தவெளி பணிமனையில் பிரித்து எடுக்கப்பட்டு வருகிறது.

புதுடெல்லி

சீன எல்லை பகுதிகளில்

# சாலை பணிகளை விரைவுபடுத்த வேண்டும்



சீன எல்லைக்கு அருகே பணிகளை விரைவுபடுத்துமாறு எல்லைச் சாலை அமைப்பிடம் மத்திய பாதுகாப்புத்துறை மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் வலியுறுத்தினார்.

பல்வேறு இடங்களுக்கு விரைவாகச் சென்று சேரும் வகையில் மலைப் பகுதிகளில் கட்டுமானத் துறையில் சீனா தனது திறமையை அதிகரித்து வருகிறது. எல்லைச் சாலைகள் அமைப்பிடம் எல்லைப் பகுதிகளில் உள்கட்டமைப்பை விரைவாக மேம்படுத்துவதற்கான அதிநவீன தொழில்நுட்பத்துடன் அதன் திறனை மேம்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2022-23 நிதியாண்டில் பி.ஆர்.ஓவின் மூலதன பட்ஜெட் 40 சதவீதம் அதிகரித்து ரூ.3,500 கோடியாக உள்ளது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் எல்லைப் பகுதிகளின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு உணர்வை இது காட்டுகிறது.

எல்லைப் பகுதிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு என்பது பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணப்படி, வலுவான, பாதுகாப்பான மற்றும் தன்னம்பிக்கையான 'புதிய இந்தியாவை' உருவாக்குவதற்கான, அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும். சர்வதேச அளவில் நாட்டின் முன்னேற்றத்துக்கு வடகிழக்கு பகுதிகளின் வளர்ச்சி முக்கியமானது.

வடகிழக்கு பகுதி இந்தியாவை தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கிறது. பி.ஆர்.ஓ பல்வேறு மாநிலங்களில் 18 திட்டங்களுடன் ஒரு துடிப்பான அமைப்பாக மாறியுள்ளது.

ஐ.பி.எல்:

# டெல்லியை தோற்கடித்த சென்னை

இந்தியன் பிரீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, டெவோன் கொன்வேயின் 87 (49), ருத்துராஜ் கைகவாட்டின் 41 (33), ஷிவம் டுபேயின் 32 (19), மகேந்திர சிங் டோணியின் ஆட்டமிழக்காத 21 (08) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கலீல் அஹ்மட் 4-0-28-2, அக்ஸர் பட்டேல் 3-0-23-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு209 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி, சிமர்ஜீட் சிங்க் (2), மகேஷ் தீக்ஷன, மொயின் அலி (3), முகேஷ் சௌத்ரி (2), டுவைன் பிராவோவிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, 17.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களையே பெற்று 91 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக டெவோன் கொன்வே தெரிவானார்.

இந்நிலையில், மற்றைய போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றிருந்தது.




இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர், அணித்தலைவர் பப் டு பிளெஸியின் ஆட்டமிழக்காத 73 (50), ரஜாட் படிடாரின் 48 (38), கிளென் மக்ஸ்வெல்லின் 33 (24), தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 30 (08) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜகதீஷா சுஷிந்த் 4-0-30-2, அபிஷேக் ஷர்மா 2-0-13-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 193 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், வனிடு ஹஸரங்க (5), ஜொஷ் ஹேசில்வூட் (2), கிளென் மக்ஸ்வெல், ஹர்ஷால் பட்டேலிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களையே பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக வனிடு ஹஸரங்க தெரிவானார்.

இந்நிலையில், பூனேயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும், குஜராத் லயன்ஸும் மோதவுள்ளன.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## சம்பியன்களை வென்ற அத்லெட்டிகோ மட்ரிட்

ஸ்பானிய லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஏற்கெனவே சம்பியனான றியல் மட்ரிட்டுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை யனிக் கராஸ்கோ பெற்றார்.

## இருதயபுரம் எவகிறீன் வி.கவுக்கு விளையாட்டு உபகரணங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்

மட்டக்களப்பு, இருதயபுரம் பிரதேச இளைஞர்களின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னணி விளையாட்டு கழகங்களில் ஒன்றான இருதயபுரம் எவகிறீன் விளையாட்டு கழகத்தினருக்கு ஒரு தொகுதிவிளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விலு, எவகிறீன் விளையாட்டு கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.









## சம்பியனான ஆனமடுவ நிவ் டவுன்

எம்.யூ.எம். சனூண்

புத்தளம், கரைத்தீவு இளைஞர் ஒன்றியத்தால் நோன்புப் பெருநாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆனமடுவ நிவ் டவுன் அணி சாம்பியனாக மகுடம் சூடியது.

கரைத்தீவு கரப்பந்தாட்ட மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரில் 13 அணிகள் பங்குபற்றி, இறுதிப் போட்டியில் குருநாகல் வொரியர்ஸை வென்று நிவ் டவுன் சம்பியனானது.


இரு அணிகளிலும் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் பல தலைசிறந்த வீரர்கள் போட்டிகளில் கலந்துகொண்டமை விஷேட அம்சமாகும்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லெய்செஸ்டரை வென்ற எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் வென்றது.

எவெர்ற்றன் சார்பாக, விடாலி மைகொலெங்கோ, மேஸன் ஹொல்கேட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை பட்சன் டகா பெற்றிருந்தார்.



அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி உள்ளது. 83 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், 67 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் செல்சியும், 66 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஆர்சனலும் காணப்படுகின்றன.

புர்கா விவகாரம்:

# ஐ.நா கவலை

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க படைகள் வெளியேறின.

இதனைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் பல்வேறு கடுமையான சட்டங்களை அந்நாட்டில் அமல்படுத்தி வருவதோடு, அவர்களது சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி, அந்நாட்டில் 'பெண்கள் பொது இடங்களுக்குச் செல்லும்போது உடல் முழுவதையும் மறைக்கும்படி புர்கா அணிந்திருக்க வேண்டும்' என தலிபான் அரசு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் புர்கா அணிவதை தலிபான் அரசு கட்டாயமாக்கியது குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் அன்டனியோ குட்ரஸ் கவலை தெரிவித்துள்ளார்.





அத்துடன் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மதித்து நடக்குமாறும் தலிபான்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேசமயம் தலிபானின் இப் புதிய சட்டத்திற்கு மனித உரிமைகள் அமைப்புகளிடமிருந்தும் கடுமையான கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

உக்ரேன்

## செலன்ஸ்கியின் மனைவியைச் சந்தித்தார் ஜில் பைடன்

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே 75 நாள்களுக்கும் மேலாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

அதே சமயம் இப்போரினை எதிர்கொள்ள உக்ரேனுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி ஜில் பைடன், நேற்று முன்தினம் (08) திடீரென உக்ரேனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு உக்ரேனின் ஜனாதிபதியான செலன்ஸ்கியின் மனைவி, ஒலேனே ஜெலன்ஸ்கியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன், "ஐ.நா உறுப்பினர்கள், உக்ரேனியர்களுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும்" என்றும் ஜில் பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## 1.60 இலட்சம் போட்டியாளர்கள் பங்கேற்ற ஓட்டப் பந்தயம்

தண்டுவடவாத சிகிச்சை தொடர்பான ஆய்வுக்கு நிதி திரட்டுவதற்காக 165 நாடுகளில் நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் ஒரு இலட்சத்து 60,000 பேர் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர்.

'Wings for Life' என்ற தொண்டு நிறுவனம், 9 ஆண்டுகளாக மே மாத முதல் ஞாயிற்றுகிழமை, இந்த ஓட்டப்பந்தயத்தை நடத்தி வருகிறது.

அந்தவகையில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற இப்போட்டியில் 56 கிலோ மீற்றர் ஓடிய ரஷ்ய பெண்மணி நினா ஜரினா பெண்கள் பிரிவிலும், 64.5 கிலோ மீற்றர் ஓடிய ஜப்பானின் ஜோ ஃபுகுடா ஆடவர் பிரிவிலும் முதலிடத்தை பிடித்தனர்.





அதிக பட்சமாக இந்தியாவின் ஜெய்ப்பூரில் 42 பாகை செல்சியஸ் வெயிலிலும், குறைந்தபட்சமாக கிரீன்லாந்தில் - 8 பாகை செல்சியஸ் குளிரிலும் இப் போட்டி நடைபெற்றது.



அமெரிக்கா

## மனைவியின் இறுதி ஆசையை நிறைவேற்றிய கணவர்

தனது மனைவியின் இறுதி ஆசையை நிறைவேற்றும் வகையில் நபர் ஒருவர் கிட்டார் வடிவில் 70,000க்கும் மேற்பட்ட சைப்ரஸ் மற்றும் யூகலிப்டஸ் மரங்களை வைத்து காடு ஒன்றினை வடிவமைத்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த விவசாயியான பெட்ரோ மார்ட்டின் என்பவரே, இவ்வாறு தனது காதல் மனைவிக்காக குறித்த காட்டை வடிவமைத்துள்ளார். இத் தம்பதியினருக்கு 4 குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் அவரது மனைவி அர்ஜெண்டினாவின் கார்டோபா என்ற இடத்தில் உள்ள தமக்குச் சொந்தமான பண்ணை நிலத்தை கிட்டார் வடிவத்தில் உருவாக்க வேண்டும் என்று கூறிவந்தார். ஆனால் அவ்வாறு கூறிய சில நாள்களிலேயே அவர் உடல்நலக் குறைவு காரணமாக இறந்து விட்டார்.

அதன் பிறகு, தனது மனைவியின் கடைசி ஆசையை நிறைவேற்ற முடிவு செய்த பெட்ரோ மார்ட்டின், தனது குழந்தைகளின் உதவியுடன் சுமார் 7,000 மரங்களைக் கொண்டு குறித்த காட்டை வடிவமைத்துள்ளார்.

மேலும், தனது மனைவி மேலே சொர்க்கத்தில் இருந்து இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இருப்பார் என்ற எண்ணத்தில், இதைத் தினமும் அவர் பராமரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன்

## பாடசாலை மீது குண்டுத் தாக்குதல்

### உயிரிழப்பு 60 ஆக அதிகரிப்பு

நேட்டோ அமைப்புடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரேன் மீது ரஷ்யப் படையினர் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து கடுமையாகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் உக்ரேனின் லுஹான்ஸ்க் நகரம் அருகே சுமார் 90 பேர் தஞ்சமடைந்திருந்த பாடசாலை வளாகத்தின் மீது அண்மையில் ரஷ்ய படைகள் நிகழ்த்திய வான் தாக்குதலில் பொது மக்கள் 60 பேர் உயிரிழந்துள்ளதாக உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.



அத்துடன் இதுவரை 2 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், 30 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டதாகவும், தற்போது இடிபாடுகளை அகற்றும் பணிகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## எலோனின் உயிருக்கு ரஷ்யாவால் ஆபத்து?

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தீவிரமாகப் போர் இடம்பெற்று வருகின்றது.



அதேசமயம் உக்ரேனுக்கு உதவும் வகையில் உலக பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்லிங்க் இணைய சேவையை உக்ரேனில் செயற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் எலோன் மஸ்க்கிற்கு ரஷ்யாவிடமிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எலோன் மஸ்க் அண்மையில் வெளியிட்ட டுவிட்டர் பதிவின் மூலமே இச் சந்தேகம் எழுந்துள்ளது. குறித்த பதிவில் 'நான் மர்மமான முறையில் உயிரிழக்கலாம்' எனப் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் உக்ரேனுக்கு உதவியதற்காக ரஷ்யாவால் எலோன் மஸ்கின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து, மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 10 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

